விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 061 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 06 புதன்கிழமை (18.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

யுத்த காலத்தில் இடம்பெற்ற வன்முறை, அடக்குமுறை தொடர்பாக

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

இலங்கையில் 1983 முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மோதல்கள்சார் பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? என இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட 02ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளில் திருத்தம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல 02ஆம் பக்கம் பார்க்க

## டில்லி சென்றடைந்தார் ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில் இந்தியா பயணமான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று மாலை புதுடில்லியைச் 15ஆம் பக்கம் பார்க்க

# பயங்கரவாதச் சட்டம் அரசைப் பாதுகாக்கவே

## முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் விமர்சனம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொடூரமானது என்றுமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

சட்டத்தரணி கொலை

## இராணுவ முகாமிலிருந்து ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது

### பாதுகாப்பு அமைச்சர் விஜேபால




(கொழும்பு)

அண்மையில் சட்டத்தரணியும் அவரது மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு இராணுவ முகாம்களி 16ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பிரிட்டன் முழுமையான ஆதரவு

### ஜனாதிபதியிடம் பிரிட்டன் துணைப் பிரதமர்



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பிரிட்டன் முழுமையான ஆதரவு வழங்கும் என ஜனாதிபதி அநுரவிடம் பிரிட்டன் துணைப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் துணைப் பிரதமர் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நாளை

### ஒருவழிப்பாதையாகின்றது இராமநாதன் வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 15ஆம் பக்கம் பார்க்க

அநுர அரசாங்கத்தின்

## ஊழல் எதிர்ப்புத் தொடர்பான நடவடிக்கைக்கு ஐ.எம்.எப் பாராட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜனாதிபதி 02ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்தானது

உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

அச்சுறுத்தல் இருக்குமாயின்

## இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி நடந்திருக்குமா?

### சபையில் அமைச்சர் பிமல் கேள்வி



(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்குமாயின் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது [illegible] உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு வழங்கிய ஆணைக்கு அமையவே

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இரத்து - பிரதமர்



(கொழும்பு)

ஊழல்மிக்க அரசியல் கலாசாரத்தால் தான் மக்கள் ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்பையும் வெறுக்கிறார்கள்.

சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்க புதிய மாற்றங்களை கொண்டு வர வேண்டும். மக்களுக்கு வழங்கிய ஆணைக்கு அமைவாகவே பாராளுமன்ற ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டத்தை கொண்டு வந்துள்ளோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காகவோ அல்லது பிரபல்யமடைவதற்காகவோ பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலத்தைக் கொண்டு வரவில்லை. இந்த சட்டம் 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் இதுவரையான காலப்பகுதியில் இந்தச் சட்டம் ஐந்து திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஓய்வூதிய சட்டம் அரசியல்வாதிகளுக்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை. 1985 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தில் விரும்பிய ஓய்வூதியத்தை தெரிவு செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பட்ட காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரண்டாவது திருமணம் முடித்தால் அவரது மனைவிக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் முழு அரசியல் கட்டமைப்பையும் இவ்வாறான செயற்பாடுகளினால் தான் மக்கள் எதிர்க்கிறார்கள். இதனை மாற்றியமைக்க கூடாதா, சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்கினால் தான் சிறந்தவர்கள் அரசியலுக்கு வருவார்கள். நாடும் முன்னேற்றமடையும்.

ஊழல்மிக்க அரசியல் கலாசாரத்தினால் ஜனநாயகம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

இது இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதொரு விடயமல்ல, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார். (ம-7)

## ஊழல்...

அநுரவிடம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவாவுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்று (17) சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்புக்குப் பின்னர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தமது எக்ஸ் தளத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வெகுதூரம் கடந்து வந்துள்ளது. அரசாங்கத்தின் சீர்திருத்த வேலைத்திட்டம் நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் நற்பலன்களை அளித்து வருகிறது.

அனைவருக்கும் சுபீட்சத்தை வழங்கும் வலுவான மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் சீர்திருத்தங்களைத் தொடர்வதன் முக்கியத்துவத்தை தாம் வலியுறுத்தியதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் நல்லாட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புகளுக்கான அர்ப்பணிப்பு மூலம் விரைவான அபிவிருத்தி மற்றும் நிலைபேறான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான தனித்துவமான வாய்ப்பை இலங்கைக்கு வழங்குகிறது என்று சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டு வரும் நேரத்தில் ஏற்பட்ட கடுமையான இயற்கை பேரழிவு குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா வருத்தம் தெரிவித்ததோடு, இலங்கையின் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்திற்கு தனது ஆதரவையும் தெரிவித்தார்.

ஆயுத மோதல்கள், சுனாமிப் பாதிப்புகள், பயங்கரவாதத் தாக்குதல்கள், தொற்று நோய்கள் மற்றும் அரசியல் நெருக்கடிகள் நீண்டகாலமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களுக்கு ஒரு புதிய பொருளாதார ஊக்கத்தின் அவசியத்தையும் வீடுகள், காணி, மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (ம-7)

## மனித ...

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(17) நடைபெற்ற பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரை யாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டிப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 17 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சிறுவனின் உறவினர் நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் இந்தச் சம்பவத்துக்கும் நீதி கிடைக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு 2026.01.13 ஆம் திகதியன்று இலங்கையில் மோதல்கள்சார் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பில் அரசாங்கமோ அல்லது விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரோ பதிலளிக்கவில்லை.

1983 - 2009 வரையான காலப்பகுதியில் பாலியல் ரீதியான சித்திரவதைகள் இந்த நாட்டில் கூர்மையடைந்தன. குற்றவாளிகள் பலர் இன்றும் சுதந்திரமாக உள்ளார்கள். ஒருசிலர் பதவிகளிலும் உள்ளார்கள். இந்த அரசாங்கம் சட்டத்தை மதித்து செயற்படுவதாயின் இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தச் சூழலில் உயிர்பிழைத்தவர்கள் புகாரளிப்பதற்கு முடியாத அளவுக்கு பல்வேறுபட்ட வகையில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். நீதிக்கான காத்திருப்பும் காலவோட்டத்தில் கேள்விக்குள்ளாக்கப்படுவது நீதிப் பொறிமுறைக்கு முரணானது. ஆகவே இந்த அறிக்கை பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது . ஆகவே நீதி வழங்கலில் இந்த அறிக்கையை ஒரு ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## ஆசிரியர்...

ஆசிரியர் வெற்றிடங்களுக்காகத் திறந்த அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிபந்தனைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2474/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, விண்ணப்பதாரிகள் தமது பட்டத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய இறுதித் திகதி 2026 மார்ச் 5 ஆம் திகதி என நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதையடுத்து, வர்த்தமானியில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் அதிகளவான பட்டதாரிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)


கௌரவிப்பு விழா

கவிஞர் தம்பித்துரை ஐங்கரன் தேசியத்தில் முதலிடம்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் கௌரவிப்பு




புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஆண்டு தோறும் நடத்தப்படும் அரச உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன் போட்டி - 2025 இல் கலந்து கொண்ட கவிஞர் தம்பித்துரை ஐங்கரன் அவர்கள் பாடலாக்கத்தில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

இதனைப் பாராட்டி குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் 07.02. 2026ம் திகதி அதன் தலைவர் திரு.சு.சிவபாதம் அவர்களின் தலைமையில் கவிஞர் தம்பித்துரை ஐங்கரன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு குரும்பசிட்டியில் நடைபெற்றது.

(6861)



நாரந்தனை

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில்
சைவ மகாசபையின் 75 வது வருட வருடாந்த பொதுக்கூட்டம்

22.02.2026

அம்பிகை அடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் மாசி மாதம் 10ம் நாள் (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மணி மண்டபத்தில் சபைத் தலைவர் திரு.சு.இராமலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது.

அன்றைய தினம் சபை அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள், அம்பிகை அடியார்கள் அனைவரும் வருகை தந்து கூட்டத்தில் பங்குபற்றி ஆலயத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு இறையன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு : பிரேரணைகள் ஏதும் இருப்பின் எழுத்து மூலம் செயலாளருக்கு 19.02.2026 வியாழக்கிழமை பி.ப 5.00ற்கு முன்னர் அறியத் தரவும். கூட்டத்தினத்தன்று உரிய நேரத்தில் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

சைவ மகாசபை, நாரந்தனை.
18.02.2026

திரு.கோ.கருணாகரன்
செயலாளர்

(6865)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கங்களுக்காக பதவி விலகப் போவதில்லை

## அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலடி

**(கொழும்பு) சட்டத்தரணி புத்திக மல்லவாரச்சி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத்தான் பதவி விலகப்போவதில்லை என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள பதவி விலகல் கோரிக்கை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

சட்டத்தரணி ஒருவரது படுகொலை என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்தச் சம்பவம் குறித்துக் கேள்விப்பட்டவுடன், குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். தற்போதைய நிலையில், உயர் மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தியவர்களே இன்று எம் மீது அத்தகைய குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றனர்.

எமது ஆட்சியில் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுகின்றன.

இந்த விசாரணைகளின் முடிவில் உண்மைக் குற்றவாளிகள் யார் என்பது நாட்டுக்குத் தெரிய வரும்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எமது அரசின் முதன்மைப் பொறுப்பு. பழைய அரசியல் கலாசாரத்தை முன்னிறுத்தி எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்காகவோ அல்லது அரசியல் இலாபம் தேடும் கோரிக்கைகளுக்காகவோ நான் பதவி விலகப் போவதில்லை.

சட்டத்தரணிகள் உட்பட அனைத்து குடிமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (நி)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் நேற்று முதல் ரத்து

(கொழும்பு) இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஆளும் கட்சி அதிகாரப்பூர்வமாக இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார இந்த விடயத்தை பாராளுமன்றில் அறிவித்துள்ளார்.

இதன்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதிய கொடுப்பனவு இனி வழங்கப்படாது.

இதேவேளை, இதுவரையில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்ட தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என சிலர் வதந்திகளை கிளப்பி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


எனினும் இதுவரையில் செலுத்தப்பட்ட தொகைகள் எதுவும் மீள அறவீடு செய்யப்படாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களைப் போலவே தற்பொழுது பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியம் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஓய்வு பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று கோடியே 44 இலட்சம் ரூபாய் ஓய்வூதிய கொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் இவ்வாறு ஓய்வூதியம் பெற்றுக் கொள்வது நியாயம் இல்லை என்பதே தமது நிலைப்பாடு என அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார பாராளுமன்றில் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையை வந்தடைந்தார் இங்கிலாந்து துணைப் பிரதமர்



(கொழும்பு) இங்கிலாந்தின் துணைப் பிரதமர் டேவிட் லாம்மி, ஒரு குறுகிய அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வந்தார்.

இந்த விஜயத்தின் போது, அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைகள் பராமரிப்பு சீர்திருத்தம் குறித்த உலகளாவிய சாசனத்தை ஆதரிக்கும் ஒரு ஒப்பந்தத்தில் லாம்மி கையெழுத்திடவுள்ளார்.

மேலும் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் நடைபெறும் ஒரு நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

# உங்களால்தான் இது சாத்தியமானது

## அநுரவுக்கு பாகிஸ்தான் பாராட்டு



2026ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி கொழும்பில் சுமுகமாக நடைபெறுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்கொண்ட இராஜதந்திர முன்னெடுப்புகளே காரணம் என குறிப்பிட்டு பாகிஸ்தான் அரசு நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானின் உள்துறை மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு அமைச்சர் மொஹ்சின் நக்வி நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு எதிராக விளையாடுவது குறித்து பாகிஸ்தான் தயக்கம் காட்டிய நிலையில், ஜனாதிபதி அநுர குமார பாகிஸ்தான் பிரதமரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பின்னரே அந்தத் தீர்மானம் மாறியதாக நக்வி குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் நக்வி, "ஜனாதிபதி பேசிவிட்டார், இனி எந்தப் பிரச்சினையும் இல்லை, நாம் விளையாட வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் என்னிடம் கூறினார்.

உங்களால் தான் இந்தப் போட்டி சாத்தியமானது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் என சுமார் 200 கோடிக்கும் அதிகமான மக்களை இந்தப் போட்டி மகிழ்வித்துள்ளது. நீங்கள் தான் இந்த நிகழ்வின் உண்மையான நாயகன்" என ஜனாதிபதியைப் பாராட்டினார்.

கிரிக்கெட் விளையாட்டையும் தாண்டி, முதலீடு, சுற்றுலா மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு போன்ற துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பாகிஸ்தான் அணியின் வருகை இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், "டித்வா" சூறாவளி போன்ற இக்கட்டான காலப்பகுதிகளில் இலங்கை மக்களுக்கு பாகிஸ்தான் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார். (நி)

# இ.போ.ச வில் இனி தகுதிக்கே இடம்

## அதிரடி அறிவிப்பு

(கொழும்பு) இனிவரும் காலங்களில் இலங்கை போக்குவரத்து சபையின் பதவிகளுக்கு ஊழியர்களை உள்வாங்கும் நடவடிக்கைகள், தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அனைத்து பதவிகளுக்குமான ஊழியர் உள்வாங்கல் செயன்முறையை முறைப்படியாக மேற்கொள்வதே இதன் நோக்கம் என அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் சில நாட்களில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய அலுவலகங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன மேலும் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சொக்கர் மாஸ்டர் சம்பியன் கிண்ணம் அண்ணாசிலையடி லெஜென்ஸ் வசம்



வடமராட்சி சிரேஷ்ட வீரர்களுக் கான சொக்கர் மாஸ்டர் சம்பியன் கிண்ணத்தை அண்ணாசிலையடி லெஜென்ஸ் எவ்.சி. அணியினர் கைப்பற்றினர்.

வடமராட்சி சிரேஷ்ட வீரர் களுக்கான சொக்கர் மாஸ்டர் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் டைம ன்ஸ் எவ்.சி அணியை எதிர்த்து அண்ணாசிலையடி லெஜென்ஸ் எவ்.சி. அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் டைமன்ஸ் எவ்.சி. அணியினருக்கு பல வாய்ப்புகள் கிடைத்த போதிலும் அவர்கள் கோலாக்க தவறிவிட்டனர். இத னால் இடைவேளைக்கு முன் னரான ஆட்டத்தில் இரு அணி களும் கோல் எதனையும் பதிவு செய்யாமல் சமநிலையில் முடிந் தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி முதலாவது நிமிடத்தில் அண்ணாசிலையடி லெஜென்ஸ் எவ்.சி. கோல் காப் பாளர் பெற்றுக் கொண்ட பந்தை அடித்த போது எதிரே நின்ற டைமன்ஸ் அணி வீரர் ராஜா கோலாக்க ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

டைமன்ஸ் எவ்.சி. அணி வீரர் களான ராஜா மற்றும் ரமணன் ஆகியோர் கோல் போடுவதற்கு தமக்கு கிடைத்த அரிய சந்தர்ப் பத்தை நழுவவிட்டனர். இருப்பி னும் அண்ணாசிலையடி எவ்.சி. அணி வீரர் அனு ராகாந்தன் தட்டிக் கொடுத்த பந்தை லங்கேஸ்வரன் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது.


டைமன்ஸ் எவ்.சி. அணியினர் பல நிமிடங்கள் பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும் மேலதிக கோல்களை பதிவு செய்ய முடியவில்லை.

ஆட்ட நேர முடிவில் இரு அணி களும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தனர். இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக் கப்பட்டது.

இதில் அண்ணாசிலை யடி லெஜென்ஸ் எவ்.சி. அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண் ணத்தைச் சுவீகரித்துக் கொண்ட னர்.

இதில் தொடர் ஆட்ட நாய கனாக டைமன்ஸ் எவ்.சி. அணி வீரர் ராஜ். ஆட்ட நாயகனாக அண்ணா சிலையடி லெஜென்ஸ் எவ்.சி. அணி வீரர் லங்கேஸ் வரன், சிறந்த கோல் காப்பாளராக டைமன்ஸ் எவ்.சி. அணி வீரர் பாலா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (3-90)

## நீண்ட நாள் கனவு நனவானது பெத்தும் நிஸ்ஸங்க நெகிழ்ச்சி



ஐ.சி.சி ரி-20 தொடரில் அவுஸ் திரேலியாவிற்கு எதிரான முக்கியமான போட்டியில் வெற்றி பெற்று, இலங்கை அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் நாயகன் பெத்தும் நிஸ்ஸங்க, அணியின் திட்டமிடல் மற்றும் கள நிலவரம் குறித்து தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

போட்டிக்கு பின்னரான செய்தி யாளர் சந்திப்பில் பேசிய அவர், "நாங்கள் ஏற்கனவே இந்த மைதா னத்தில் விளையாடியுள்ளோம், எனவே ஆடுகளத்தின் தன்மை எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

முதலில் பந்துவீசுவது என்ற முடிவு சரியானது என்பதை நிரூபித் துள்ளோம்," என குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 181 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத் தாடிய இல ங்கை அணிக்கு, பெத்தும் நிஸ் ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஜோடி வலுவான அடித் தளம் அமைத்தது.

இந்த உலகக் கிண்ணத் தொட ரில் சதம் விளாசிய முதல் வீரர் என்ற பெருமையை பெத்தும் நிஸ் ஸங்க பெற்றார்.

"உலகக் கிண்ணத்தில் சதம் அடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் இலக்கு, அதை இன்று அடைந்தது மகிழ்ச்சி அளிக் கிறது," என பெத்தும் நிஸ்ஸங்க நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். (3)

## கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட போட்டி; மலையாளபுரம் புதிய பாரதி அணி சம்பியன்



கிளிநொச்சி மாவட்ட கரப் பந்தாட்ட சங்கம் நடாத்திய 2026 ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கரப்பந் தாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப் பந்தாட்ட சுற்றுத் தொடர் போட்டி யினை நடத்தியிருந்தனர்.

குறித்த போட்டியின் இறுதிப் போட்டி கிளிநொச்சி உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடை பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக மும் வட்டக்கச்சி குறிஞ்சி விளை யாட்டுக் கழகமும் மோதியிருந் தன.


மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கணக்கில் வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. (3)



யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் மதியம் 1:30 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்திரு A P திருமகன் அடிகளார் தலை மையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம் பயனளிப்பதாக மாறிட வேண்டும்



இன்று திருநீற்றுப் புதன். ஆண்டவராகிய இயேசுவின் உயிர்ப்பு விழாவிற்கு ஆயத்தமாக நாற்பது நாட்கள் அனுசரிக்கப்படும் தவக்காலத்தின் முதல் நாளாகும். இன்று குருவானவர் புனிதப்படுத்தப்பட்ட சாம்பலை எடுத்து "மனந் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:15) அல்லது "மனிதனே நீ மண்ணாய் இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்" (தொ.நூ. 3:19) என்று கூறி இறைமக்களின் நெற்றியில் சாம்பலால் சிலுவை அடையாளம் வரைவார். இவ்வாறு பெரும் சிறப்போடும், எதிர்ப்பார்ப்போடும் ஆரம்பமாகின்ற இந்த தவக்காலம் ஆண்டவராகிய இயேசுவின் உயரிய பணியையும், உன்னதத் தியாகத்தையும் நமக்கு கோடிட்டுக் காட்டுகின்றது.

தவக்காலம் என்பது நாற்பது நாட்களும் திருப்பலிகளில் கலந்து கொள்வதோடும், இறைவார்த்தைகளை தியானிப்பதோடும், சிலுவைப் பாதை வழிபாடுகளில் கலந்து கொள்வதோடும் நின்று விடுவதில்லை. பிறர் அன்புப் பணி புரிவதோடும், உடலை ஒறுத்து, வருத்தி ஆண்டவராகிய இயேசுவின் அளவற்ற அன்பைக் குறித்து சிந்திப்பதோடும் நிறுத்திக் கொள்ள வேண்டிய காலமும் அல்ல. ஆண்டவராகிய இயேசு வைப்போல் பிறருக்காகப் பலியாக வேண்டிய வாழ்வுதான் கிறிஸ்தவ வாழ்வு என்பதை எடுத்துக் காட்டுவதாக வாழ்ந்திட வேண்டிய காலம் தான் தவக்காலம்: "நீங்கள் உலகின் கடையெல்லைவரை எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.பணி 1:8) ஆண்டவராகிய இயேசுவின் கட்டளைப்படி நாமும் சாட்சிகளாய் மாறவேண்டும்.

தவக்காலத்தில் நம்மிடம் காணப்படவேண்டிய மனநிலை என்ன? தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டியவை என்ன? என்பதை திருவிவிலியத்தில் பார்ப்போமாக இருந்தால்,

- உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு முழு இதயத்தோடு ஆண்டவரிடம் திரும்பிச் செல்ல வேண்டும். உடைகள் அல்ல, இதயம் தான் கிழிய வேண்டும். (யோவேல் 2:12)
- நோன்பிலிருந்து வருந்தி முகக்குப்புற வீழ்ந்து மன்றாட வேண்டும். (தி. பாடல் 35:13)
- பசித்தோருக்கு உணவு பகிர்ந்தளிக்க வேண்டும், தங்க இடமில்லாதவர்க்கு இடமளிக்க வேண்டும். உடையற்றோருக்கு அணிய உடை கொடுக்க வேண்டும். (எசாயா 58:7)
- நன்மையை நாடுங்கள், தீமையைத்தேடாதீர்கள். (ஆமோஸ் 5:14)
- ஒருவருக்கொருவர் அன்பும், கருணையும் காட்டவேண்டும். தீமைசெய்ய மனதாலும் நினைக்கக்கூடாது. (செக்கரியா 7:9-10)
- மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்ட வேண்டும்.(மத்தேயு 3:8)
- நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல முகவாட்டமாய் இருக்கக்கூடாது.(மத்தேயு 6:16)
- பகைவரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். (லூக்கா 6:35)
- இறைவார்த்தையை கேட்டு அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். (யாக்கோபு 1:22)

க. அருள்நேசன்,
குருநகர்.

# ரமழானை முன்னிட்டு பேரீச்சம்பழம் அன்பளிப்பு

(கொழும்பு)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கை முஸ்லிம்களுக்காக 50 தொன் பேரீச்சம்பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் அமைந்துள்ள சவுதி தூதரகத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் மஹ்மூத் அல் கஹ்தானி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் வழங்கிய பேரீச்சம்பழ நன்கொடையை சமய விவகாரங்கள் மற்றும் கலாசார பிரதி அமைச்சர் முனீர் முலாஃபர் பெற்றுக் கொண்டார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 350 | 400 | 400 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 200 | 140 | 370 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 400 | 400 |
| தக்காளி | 200 | 180 | 200 | 200 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 200 | 100 |
| கோவா | 180 | 200 | 200 | 250 | 220 | 200 |
| கரட் | 300 | 360 | 400 | 400 | 350 | 300 |
| பூசணி | 100 | 130 | 100 | 150 | 100 | 130 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 150 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 200 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 400 | 550 | 500 | 600 | 400 | 400 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 320 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 450 | 400 | 330 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 400 | 300 | 270 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 250 | 200 | 200 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 | 500 | 700 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 350 | 300 | 400 | 400 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | 350 | -- | -- |
| கீரை – 1 பிடி | 120 | 80-120 | 150 | 120 | -- | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 200 | 150 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 450 | 500 | 400 | 450 | -- | 375 |
| வெங்காயப்பூ | 200 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | .150 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 150 | -- | 100 |

# இராசிபலன்

18.02.2026
மாசி 06 , புதன்கிழமை
பிரதமை முன்னிரவு 6.04மணிவரை
சதயம் முன்னிரவு 10.24 மணிவரை

சுப நேரம் 5.02-6.32 மணிவரை
இராகு காலம் 12.32-2.23 மணிவரை
விபூதிப் புதன்

சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்.

வளவன்




நீங்கள் எதிர்பாராத பிரமுகர் ஒருவர் உங்களைத் தொலைபேசி வழியில் தொடர்பு கொண்டு பேசலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.




மகிழ்ச்சி குறையாதிருக்க அடுத்தவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் சிந்தை மகிழ்வீர்கள்




தாய்வழி ஆதரவு பெருகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், கல்யாணக்கனவுகள் நனவாகலாம்.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தந்தை வழி உறவில் நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.





சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கனவுப்பலிதமுண்டு, சொந்தபந்தங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.





வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம்.





ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் கூடும், உடல் நலனில் கவனம் தேவை, மறக்கமுடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், சிந்தனை மிகுதியான நாள்.





எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தொழில் போட்டிகள் அகலும், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உற்சாகமான நாள், பொதுவாழ்வில் கௌரவம் மிக்க சம்பவங்கள் இடம்பெறலாம்.




உடன்பிறப்புக்கள் அனுசரனையாக நடந்து கொள்வார்கள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலை உயரும், போசன சுகமுண்டு.




உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

மௌனம் அறிவிற்கு அழகு, பொறுமை திறமைக்கு ஏற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் பரிசோதனை நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை மற்றும் பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க் கிழமை காலை பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி கோணேஸ்வரன் தலைமையில் பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

பரிசோதனை நிகழ்வுகளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முன்னெடுத்திருந்தார். இதன்போது பொலிஸ் பரிசோதனை, வாகன பரிசோதனை மற்றும் பொலிஸாருக்கான விசேட பயிற்சி வகுப்பு ஆகியனவும் இடம்பெற்றிருந்தன. (8-30)

## சிரமதானம்

(சாவகச்சேரி)

புங்குடுதீவு ஆலடி சந்தி, வரசித்தி விநாயகர் ஆலயத்தின் முன்றல், குழந்தை கடைச் சந்தி உள்ளிட்ட பகுதிகளில் புங்குடுதீவு உலக மைய தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் செயலாளர் க.குணாளனின் ஏற்பாட்டில் அண்மையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் நிரந்தர தர்மகர்த்தாவாக விளங்கிய இராசரெத்தினம் நினைவாகவும், அவரது துணைவியார் இ.நவநீதம் நினைவாகவும் ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவியில் சிரமதானப் பணியில் பங்காற்றிய பொதுமக்கள் அனைவருக்கும் உலருணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (8-30)

# யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நாளை நான்கு நாட்களில் பன்னிரண்டு அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்கள் பன்னிரண்டு அமர்வுகளாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட் கிழமை நண்பகல் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில், பல்கலைக்கழக சபை அறையில் நடைபெற்றது.

இதன் போது முன்னாள் கலைப்பீடாதியும், பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாக்குழுத் தலைவருமான பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழா பற்றி விளக்கமளித்தார்.

அவர் தெரிவிக்கையில், இம்முறை பட்டமளிப்பு விழாவின் போது 376 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும் 2 ஆயிரத்து 557 உள்வாரி மாணவர்களுக்கும் 252 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 66 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் ஒருவருக்கு வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் அடங்கலாக 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஐந்தாவது வேந்தர் தகைசார் பேராசிரியர் இராஜரட்ணம் குமாரவடிவேல் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப்பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம், கலைப்பீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், இந்துக்கற்கைகள் பீடம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக் கல்வி முறைமை மூலம் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 94 தங்கப்பதக்கங்களும், 69 பரிசில்களும், 15 புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் சீர்பெறும் விருதான பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இதன்படி 2021 ஆம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அடிப்படையிலான தங்கப்பதக்கத்தைக் கலைப் பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெற்றுக் கொள்கின்றார்.

பட்டமளிப்பு வைபவத்துக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகளாக சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை மார்ச்மாதம் 5 ஆம் திகதிபிற்பகல் 3 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கும் இடம்பெறவிருக்கின்றது.

சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரையை ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் தொடர்பியல் துறையின் ஓய்வுபெற்ற துணைப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, "சமூக ஈடுபாட்டுடன் செயற்படும் பல்கலைக்கழகம்: ஆய்வு, உரையாடல் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு குறித்த ஆழ்ந்த சிந்தனைகள்" என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் குழந்தை மருத்துவத் துறையைச் சேர்ந்த இருக்கைப் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் "அடுத்த தலைமுறையைப் பேணிப் பாதுகாப்பு: குழந்தைகள் ஆரோக்கியம் குறித்த சமகாலக் கண்ணோட்டங்கள்" என்ற தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின்றனர் என தெரிவித்தார். (8)

## மீண்டும் கண்ணம்மா திரைப்படம்!

(யாழ்ப்பாணம்)

கண்ணம்மா திரைப்படம் மீண்டும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்படும்.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி பெய்த கனமழை காரணமாக நிகழ்ச்சியைத் தவறவிட்டவர்கள், ஏற்கனவே டிக்கெட்டுகளை வாங்கியவர்கள் அதே டிக்கெட்டுகளைப் பயன்படுத்தி திரைப்படத்தைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள்.

ஏனையவர்கள் விற்பனைப் பகுதியில் டிக்கெட்டுகளை வாங்கலாம் அல்லது ஒன்லைனில் முற்பதிவு செய்யலாம்.

மேலதிக தகவல்களுக்கு 077 803 9425, 077 808 0819 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (8)

## சொற்பொழிவு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவு கோயில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 11 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம் பெறவுள்ளது. (8)

# உட்கட்டமைப்புகளை சீர்செய்ய வடக்கிற்கு மேலதிக நிதி ஒதுக்கீடு

## ஆளுநர் சுட்டிக்காட்டு





பருத்தித்துறை கொட்டி அருள்மிகு சித்திவிநாயகர் (பெரிய பிள்ளையார்) ஆலய தேர்த் திருவிழா நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

(யாழ்ப்பாணம்)

டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் உட்கட்டமைப்புக் களை மறுசீரமைப்பதற்கு, மாகாண சபையின் வருடாந்த வரவு - செலவுத் திட்ட நிதிக்கு மேலதிகமாக, மத்திய அரசாங்கத்தால் விசேட நிதி ஒதுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் துணைத் தூதுவர் ஒலிவியர் பிராஸ் (Olivier Praz) தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

டித்வா பேரிடரால் வடக்கில் ஏற்பட்ட சேதங்கள் "பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்புக் களைச் சீர்செய்வதற்கு நாம் கோரிய நிதியை விடுவிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் வழமையான மழை காலங்களை விடவும் ஏனைய மாதங்களிலும் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகின்றது. இதனால், வடக்கு மாகாண விவசாயிகள் தமது பாரம்பரிய பயிர்ச்செய்கை நாட்காட்டியில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது" எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த துணைத் தூதுவர், சுவிட்சர்லாந்திலும் காலநிலை மாற்றம் பெரும் சவாலாக உள்ளதெனவும், அதனை எதிர்கொள்ளும் வகையில் தமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு முதலீடுகள் குறித்தும் ஆளுநருடன் பகிர்ந்து கொண்டார்.


வடக்கு மாகாணத்தின் சில மாவட்டங்களுக்குத் தான் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதாகக் குறிப்பிட்ட துணைத் தூதுவர், கடந்த காலங்களில் சுவிட்சர்லாந்து அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட திட்டங்களையும், டித்வா பேரிடரால் மக்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களையும் கேட்டறிந்ததாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி பல தடவைகள் விஜயம் மேற்கொண்டுள்ளமை மற்றும் கடந்த காலங்களில் காணப்பட்ட வீதியோரப் பாதுகாப்பு முகாம்கள் அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் துணைத் தூதுவர் தனது சாதகமான கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

மேலும் மாகாண சபையின் அதிகார வரம்புகள், செயற்பாடுகள் மற்றும் சிவில் ஓயாத் திட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளை வான் கடத்தல்காரர்கள் எம்மீது சேறு பூசுகின்றனர்



## அமைச்சர் நளிந்த பதிலடி

(கொழும்பு)

கடந்த காலங்களில் பாதாள உலகக் குழுக்களையும் வன்முறையாளர்களையும் வளர்த்துவிட்டவர்களே இன்று அரசின் மீது சேறு பூச முற்படுகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களிடம் தெரிவித்ததாவது.

நாட்டைப் பாதாள உலகக் கூடாரமாக மாற்றியவர்கள் யார் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். வெள்ளை வான் கலாசாரத்தையும், பகிரங்கப் படுகொலைகளையும் சட்டபூர்வமாக்கிய ஒரு அரசியல் குழுவின் பிரதிநிதியாக இருந்துகொண்டு, சாகர காரியவசம் கருத்துக்களை வெளியிடுவது வேடிக்கையானது.

தற்போதைய அரசு பொலிஸ் திணைக்களத்துக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அதனாலேயே, கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கினால் மறைக்கப்பட்ட பல குற்றச் செயல்கள் இன்று வெளிச்சத்துக்கு வருவதுடன், குற்றவாளிகள் தராதரம் பாராது கைது செய்யப்படுகின்றனர்.

இந்தச் சட்ட ரீதியான நடவடிக்கைகளைத் திசை திருப்பவே தேசிய மக்கள் சக்தி அரசு பாதாள உலகத்துடன் இணைந்துள்ளது என்ற அப் பட்டமான பொய்யை மொட்டுக் கட்சியினர் பரப்புகின்றனர்.

சட்டத்தரணியும் அவரின் மனைவியும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன. முந்தைய ஆட்சியில் நீதியைத் தடுத்ததைப் போலன்றி, எமது ஆட்சியில் குற்றவாளிகள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

தேர்தல் களத்தில் மக்கள் தங்களை முற்றாக நிராகரித்துவிட்டனர் என்பதை உணர்ந்துள்ள மொட்டுக் கட்சி, இவ்வாறான அச்சமூட்டும் கதைகள் மூலம் மீண்டும் அரசியல் உயிர் பெற முயற்சிக்கின்றது.

பிரதமரின் கருத்துக்களைத் திரிபுபடுத்தி இராணுவத்தினரைத் தூண்டிவிடும் இவர்களின் இழிவான அரசியல் இனிமேலும் எடுபடாது என அவர் தெரிவித்தார். (நி)

# இலவச யோகக்கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும்.

இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற் கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# பொன்னையா விவேகானந்தனின் 4 நூல்கள் அறிமுக நிகழ்வு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவை தாய்வீடு இதழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழக ஏற்பாட்டில் தமிழ் நாட்டு ஓவியர்கள் மருது மற்றும் ஜீவா சந்திப்பும், சிறப்புரையும் பொன்னையா விவேகானந்தனின் 4 நூல்கள் அறிமுக நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வானது இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் கவிஞர் தீபச் செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(8)


# வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி கால்நடைகள் (பசுக்கள், நாம்பன்) பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம்:- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம்:- 19.02.2026 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

(C-5016)

சிவலிங்கம் அசோக்குமார்
தவிசாளர்,
வேலணைப் பிரதேச சபை.

தொடர்புகளுக்கு:- 021 221 1505
18.02.2026



## வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம்
# ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் சண்முகம் அருள்ராஜா வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட "போவத்தை" என்ற ஆதனம் ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் 16 இல் அமைந்துள்ளது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் குமாரவடிவேல் குருபரன் முகதாவில் உறுதி இலக்கம் 376 ஆம் இலக்கத்தில் 07.12.2025 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த சண்முகம் அருள்ராஜாவுக்கு சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்றும் கட்டுவன் இறை "போவத்தை" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களின் வரைபட இலக்கம் 8515 இன் படி துண்டு A ஆகும் இவ்வாதனம் சண்முகம் அருள்ராஜா என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்ட பூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி)



# மணிவிழா வாழ்த்துக்கள்




விந்தையின் விஞ்ஞான மகள்
எந்திரப்பணி உம் சிறப்பு
மந்திரக் கோலின்றி
தந்திரமாய் உயிரியல் போதித்த
சந்திரக்களை வதன மகள்
சிந்தனையின் பெருமகளாய்
சந்தித்தோம் வேம்படியில்

Congratulations

இந்திரா தேவியே!
தந்தீர் உம் சேவை முப்பத்திரண்டாண்டு
சுந்தரமான அருந்தவராசாவும்
சொந்த மகள் ஆரணியும்
சேர்ந்திருக்க
இந்த மண்ணில் நீடு வாழ
செந்தமிழால் வாழ்த்துகின்றோம்
வாழி! வாழி!! வாழியவே!!!

எமது சக ஆசிரியர் திருமதி. இந்திராதேவி அருந்தவராசன்
அவர்கள் 17.02.2026 நேற்றுடன் 32 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.
இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி நிற்கும்

(6862)


ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# ஈரானை நெருங்கும் 12 போர்க் கப்ப
# செயற்கைக்கோள் காட்சிகளால் ப

**(டெஹ்ரான்)** ------------------ அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் என்ற போர்க் கப்பல் ஈரானுக்கு அருகே இருப்பது செயற்கைக்கோள் படங்கள் உதவி யுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிபிசி தெரிவித்துள்ளது.



ஈரானின் இராணுவத் திட்டம் மற்றும் சமீபத்தில் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்காவின் அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் அதிகாரிகள் சுவிட்சர்லாந்தில் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு கூடவுள்ள நிலையில் இத் தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஓமான் கடற்கரைக்கு அருகே லிங்கன் கப்பல் மூன்று வழிநடத்தும் ஏவுகணை கப்பல்களுடன் strike group-ஐ வழி நடத்தும் யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் 90 விமானங்கள் மற்றும் 5,680 பணியாளர்களுடன் இயங்குகிறது.

இந்தக் கப்பல் ஜனவரி மாத இறுதியில் வளைகுடா பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டதாக தகவல் இருந்தாலும், இதுவரை செயற்கைக்கோள் படங்களில் தென்படவில்லை. தற்போது இது ஓமான் கடற்கரைக்கு அருகே, ஈரானிலிருந்து சுமார் 700 கிலோமீற்றர் தூரத்தில் இருப்பது உறுதிசெய்யப்பட்

## சீனாவில் பட்டாசு கடையில் பயங்கர தீ விபத்து

### ➤ 8 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

கிழக்கு சீனாவில் உள்ள பட்டாசு கடை ஒன்றில் ஏற்பட்ட பயங்கர வெடிப்பு மற்றும் தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரமான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை ஜியாங்சு மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றில் நிகழ்ந்துள்ளது.

கடையின் அருகே வசிக்கும் ஒருவர், பட்டாசுகளை முறையற்ற முறையில் கையாண்டு வெடிக்கச் செய்ததே இந்த விபத்திற்குக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடையில் இருந்த பட்டாசுகள் அனைத்தும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறியதில், அங்கிருந்த 8 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளனர்.

மேலும் இருவர் தீ காயங்களுடன் உயிர் தப்பினர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து, சீன அவசரகால மேலாண்மை அமைச்சு நாடு முழுவதும் பட்டாசு விற்பனை மற்றும் பயன்பாடு குறித்துக் கடும் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. கடைகளுக்கு அருகே பட்டாசுகளைச் சோதித்துப் பார்ப்பதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு தயாரிப்பு, போக்குவரத்து மற்றும் விற்பனையில் பாதுகாப்பு விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (3)



## லண்டனில் தட்டம்மை
## 34 சிறுவர்கள்



(லண்டன்)

வடக்கு லண்டனில் பல பாடசாலைகளில் தட்டம்மை நோய் வேகமாக பரவி வருவதாகவும் குறைந்தது 34 சிறுவர்கள் தட்டம்மையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் காரணமாக ஐந்து சிறு வர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் அவர்கள் அனைவரும் முழுமையாக தடுப்பூசி செலுத்தவில்லை என்றும் அங்குள்ள பொது மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடும் உடல் நல பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய இந்தத் தொற்று நோய் க்கு எதிரான தடுப்பூசிகள் தங்கள் பிள்ளைகளுக்கு செலுத்தப்பட்டதை உறுதி செய்து கொள்ளுமாறு பெற்றோர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


இந்த ஆண்டின் முதல் மாதத்தில் இங்கிலாந்து முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## பல்கள்

## தற்றம்



டுள்ளது.

மேலும், உலகின் மிகப்பெரிய போர்க் கப்பலாக கருதப்படும் USS Gerald R. Ford கப்பலையும் அமெரிக்கா மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு அனுப்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது அடுத்த மூன்று வாரங்களில் அந்தப் பகுதியில் சேரக்கூடும் என கூறப்படுகிறது. கடந்த சில வாரங்களாக மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்கா தனது இராணுவப் பங்கேற்பை அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் பார்வைக்கு கிடைக்கும் ஐரோப்பிய Sentinel-2 செயற்கைக் கோள் படங்களில், ஆபிரகாம் லிங்கன் அரேபியக் கடலில், ஓமான் கடற்கரையிலிருந்து சுமார் 150 மைல் தொலைவில் காணப்படுகிறது.

செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில், தற்போது மத்திய கிழக்கு பகுதியில் 12 அமெரிக்கக் கப்பல்கள் இருப்பது கண் காணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கிற்கு சரக்கு விமானங்கள், எரிபொருள் நிரப்பு விமானங்கள் மற்றும் தொடர்பு விமானங்கள் அதிக அளவில் நகர்வது பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

# இந்தியப் பிரதமர் மோடி

## அடுத்த வாரம் இஸ்ரேலுக்கு விஜயம்




(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனது மூன்றாவது ஆட்சிக் காலத்தின் முதல் பயணமாக வரும் பெப்ரவரி மாதம் 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சுமார் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மேற்கொள்ளும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கப் பயணம், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் ஒரு புதிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் அமைகிறது. இருவரும் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை



அதிகரிப்பது தொடர்பில் விரிவாக கலந்துடையாட உள்ளனர்.

இதன்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னெடுத்துள்ள காசா அமைதித் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் நெதன்யாகு பிரதமருக்கு விளக்கமளிக்கவுள்ளார்.


இப் பிராந்தியத்தில் நிலையான அமைதியை ஏற்படுத்த இந்தியா தனது ஆதரவைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரைவுபடுத்துவது இந்த விஜயத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். (3)

# நோயினால் பாதிப்பு

வதும் 96 பேர் தட்டம்மையால் பாதிக்கப்பட்டதாகவும் இதில் மூன்றில் ஒரு பங்காக, என்பீல்ட்டில் 34 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தட்டம்மையில் பாரிய தாக்கம் கொண்ட தொற்றானது பெரும்பாலும் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளில் கற்கும் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களையே அதிகமாக பாதிக்கிறது என இங்கிலாந்து சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (3)



# ஜேர்மனியில் அரங்கேறிய பாரிய திருட்டுச் சம்பவம்

## பல மில்லியன் யூரோ கொள்ளை

(பேர்லின்)

ஜேர்மனியின் கெல்சென்கிர்ச்சென் நகரில் உள்ள ஸ்பார்கசி வங்கியில், கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களைப் பயன்படுத்தி ஹொலிவூட் பட பாணியில் ஒரு பிரம்மாண்ட கொள்ளை அரங்கேறியுள்ளது.

வங்கியின் பக்கவாட்டில் உள்ள வாகன நிறுத்துமிடத்தின் வழியாக ஊடுருவிய கொள்ளையர்கள், இராட்சத துளையிடும் இயந்திரத்தைக் கொண்டு வங்கியின் தடிமனான சுவரில் 40 சென்ரி மீற்றர் அகலத்திற்குத் துளையிட்டுள்ளனர்.

டிசம்பர் 27 முதல் 29 வரையிலான காலப்பகுதியில் நடந்த இந்தத் துணிகரச் சம்பவத்தில், பாதுகாப்பு அறையில் இருந்த 3,250 பாதுகாப்பு பெட்டிக்குள் பெரும்பாலானவற்றை உடைத்து, அதிலிருந்த தங்கம், வைரம் மற்றும் ரொக்கப் பணத்தைச் சுருட்டியுள்ளனர்.

இதன் மதிப்பு சுமார் 100 மில்லியன் யூரோக்கள் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.900 கோடி) இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளையின்போது வங்கியின் தீயணைப்பு எச்சரிக்கை மணி ஒலித்தபோதிலும், அங்கு வந்த தீயணைப்பு வீரர்கள் வெளிப்புறத்தில் சேதங்கள் ஏதும் தெரியாததால் அது தவறான எச்சரிக்கை என திரும்பிச் சென்றுள்ளனர்.

இதனைச் சாதகமாக்கிக் கொண்ட கொள்ளையர்கள், ஆதாரங்களை அழிப்பதற்காக லாக்கர் அறை முழுவதும் இரசாயனங்கள் மற்றும் தண்ணீரை ஊற்றிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தங்களின் வாழ்நாள் சேமிப்பையும், பரம்பரை நகைகளையும் இழந்த நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வெளியே திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது கண்காணிப்பு கமரா காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர், ஆனால் இதுவரை ஒருவர்கூட கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரங்கள் மூலமான கரைவலை தொழிலை தடுக்கக் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும், கரைவலைத் தொழிலில் இயந்திரப் பயன்பாட்டை கட்டுப்படுத்தவும், சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க கோரியும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

கொழும்பில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் உள்ளிட்ட குழுவைச் சந்தித்த போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, பாரம்பரிய கரைவலை மீன்பிடித் தொழிலில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் கடல் வளங்கள் அழிவடைவதும், சிறு மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுவதும் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இதன்போது பாரம்பரிய மீன்பிடித் தொழிலையும், எமது மீனவச் சமூகத்தின் உரிமைகளையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. எனவே கரைவலைத் தொழிலில் இயந்திர பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும், சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் ஆலோசனைகள் பெறப்படும் எனவும் எமது கடல் வளங்களை பாதுகாத்து, எதிர்கால தலைமுறைகளுக்கான நிலைத்த கடற்றொழிலை உறுதி செய்வதே எமது நோக்கம் எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின்போது, அமைச்சின் செயலாளர் மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளரும் உடனிருந்தனர். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
8ல்செவ்
கி-பா-19 1/2
உயரம் : 5'7"
தகைமை/தொழில்-BSc,Civil Engineer(UK)
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16533

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி-பா- 12
உயரம் -5'7"
தகைமை/தொழில்-O/L, work(pvt)
எதிர்பார்ப்பு- தகுதியான பெண்
தொ.இ: B/16534

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
7இல்செவ்
கி-பா-16
உயரம் :5'7"
தகைமை/தொழில்-BBM, Director (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16535

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா-24
3இல்சூரிசெவ்
உயரம்:6"
தகைமை/தொழில் -A/L, Driver(Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16540

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:- அத்தம்
கி-பா-46 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Degree, Project Manager
எதிர்பார்ப்பு: Only Canada
தொ.இ: B/16544

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1978-இந்து
நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி-பா-50
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc,MSc,Data Analyst
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்
தொ.இ: G/16547

பிறப்பு-1989-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
2இல்செவ்
கி-பா-37
உயரம் : 5"
தகைமை/தொழில்: Diploma, Supervisor
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16551

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-பூரம்
2இல்செவ்
கி-பா-39 1/2
உயரம் -5'6"
தகைமை/தொழில்: BSc,PHD,Engineer(Australia)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16552

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:அனுசம்
1இல்செவ்
கி-பா-20
உயரம் : 5'4"
தகைமை/தொழில் -BSc, Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16553

பிறப்பு-2000 - இந்து
நட்சத்திரம்- சுவாதி
2இல்செவ்
கிபா-20
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16555

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 542



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உடல் மொழி

ஒருவர் யாரிடமோ தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசிக் கொண்டிருப்பது என்ன என்பது நம் காதிலே விழவில்லை! இருந்தாலும் அவர் பேசுவது நல்ல செய்தியா, கெட்ட செய்தியா என்பதை அவர் முகத்தைப் பார்த்தே நம்மாலே யூகிக்க முடியும்!

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம் மலருது! புன்னகை பூக்குது! இதிலே ஒரு விடயத்தை கவனியுங்கள்.

நம்முடன் பேசிக்கொண்டிருக்கிறவர் எதிரிலே அவர் நம் குரலை மட்டும் தான் கேட்கப் போகிறார்" நம் முகம் எப்படியிருக்கு என்பதை அவர் பார்க்கப் போவதில்லை. அப்படி இருந்தும் நம் முகம் ஏன் மலர வேண்டும். இதைத்தான் "உடல் மொழி" என்கிறார்கள். நம்மை அறியாமலேயே நம் உடம்பு செய்திகளைத் தெரிவிக்கிறது அதுதான் உடல்மொழி!

ஒருவர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்திலே இருந்து கவனித்துக்கொண்டே அவர் நண்பரோடு பேசுகிறாரா? மனைவியோடு பேசுகிறாரா? மேலதிகாரியிடம் பேசுகிறாரா?

அவருக்கு கீழே பணியாற்றுகிறவரிடம் பேசுகிறாரா?

என்பதைக் கண்டுபிடிக்கலாம். காரணம் உடல்மொழி! இதைப் பற்றியெல்லாம்கூட சில நிபுணர்கள் சில விபரங்களைச் சொல்கிறார்கள்!

குறிப்பாக ஒருவர் அவரோடு நாற்காலியிலே கிட்டத்தட்ட படுத்துக்கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வையுங்களேன். எதிரிலே இருக்கிறவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்! தலையைச் சொறிவது, வேறு வேறு திசையிலே பார்க்கிறது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப்போட்டு உட்கார்ந்து, களைப்பாக கைவிரல்களைப் பின்னிப்பது அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டிருந்தார் என்றால் நாம் சீக்கிரம் அந்த இடத்தைவிட்டு எழுந்து வந்துவிடுவது நல்லது.

ஏனென்றால் இதெல்லாம் அவருடைய சலிப்பு, சோர்வு ஆர்வமின்மை இதற்கு அடையாளம் நம் பேச்சு அவரை சலிப்படைய வைத்துவிட்டது என்று அர்த்தம்.

அவர் ரொம்பவும் சோர்ந்து போயிட்டார் என்று அர்த்தம். நம் பேச்சிலே அவருக்கு ஆர்வமில்லை என்று அர்த்தம்.

அதே நேரத்தில் நாற்காலியின் நுனியிலே அமர்ந்து உடலை முன்னுக்கு நகர்த்தி எதிரிலே இருக்கின்றவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி உங்கள் பேரிலே மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும்.

நாம் எப்படிப்பட்டவர் என்பதை நம் உடம்பும் நடை உடை பாவனையும் அடுத்தவர்களுக்குக் காட்டி கொடுத்துவிடும்.

உங்கள் உடம்பு, உங்கள் பார்வை, நடை, உட்காரும் விதம் இதை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா, முரடரா, அலட்சியமானவரா, மரியாதை தெரிந்தவரா, அடக்கமானவரா, நம்பிக்கைக்கு உரியவரா, நாணயமில்லாதவரா, பயந்தவரா, திறமைசாலியா, அப்பாவியா என்பதைக் கண்டுபிடித்துவிடலாமாம்!

அதனாலே "உடல்மொழி"யைப் புரிந்துகொண்டு நம்மை கொஞ்சம் சரி செய்து கொண்டால் வாழ்க்கையிலே சுலபமாக பல காரியங்களை ச் சாதித்து விடலாம்.

ஒரு மனநல மருத்துவமனை. அங்கே ஒருவர் ஒரு நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு. கார் ஓட்டுவது மாதிரி பாவனை செய்து கொண்டிருந்தார்.

ஸ்டியரிங்கை திருப்புவது மாதிரி பின்னாடி வரும் வண்டியை நிற்கச் சொல்வது மாதிரி அப்புறம் இவர் ஒதுங்கிக்கொண்டு அவருக்கு வழிவிடுவது மாதிரி இப்பயெல்லாம் சேட்டைகள் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஒருவர் பக்கத்திலே இருந்த ஒருவரிடம் "ஏன் இப்படி செய்கிறார்?" என்று கேட்டார்.

"இவருக்கு கார் ஓட்ட வேண்டும் என்று ஆசை. அது நிறைவேறாமல் போனதினாலே இப்படி செய்கிறார்" என்றார். அவர்.

"நீங்கள் சொல்லக்கூடாதா இப்போது நீங்கள் கார் ஓட்டவில்லை. வெறும் நாற்காலியிலேதான் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று!" என்றார் இவர். இதற்கு அவர்.

"அது முடியாது ஏனென்றால் அந்தக் காரைக் கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறாரே" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைப் பொருளாதாரத்தினை பசுமையால் மீளுருவாக்கும் நுண்தோட்டங்கள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது வாழ்க்கை பலவகையான இன்னல்களை, இடர்களைச் சந்தித்த வண்ணமே கடந்து செல்கின்றது. பலரது குடும்பங்களில் வாழ்வாதாரத்தை தக்கவைப்பதே வலி நிறைந்ததாகி விட்டது.

தினம் தினம் உணவுக்காக ஏங்கவேண்டிய காலங்களை எண்ணியபடியே இன்னமும் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என்பதனை நாம் மறந்திடலாகாது. எமது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மெதுவாக உயர்வடைவதை உணரமுடிகின்றது.

எமது உணவுமுறையிலும் உணவு பழக்கத்திலும் பாரம்பரியத்தின் தாக்கம் இருந்தாலும் நாம் தற்போது நெருக்கடியான சூழலில் அவசர உணவுகளுக்குள்ளும் எம்மையறியாது உள்ளீர்க்கப்பட்டிருக்கின்றோம். எமது ஊரில் வளராத கோதுமையினை மாவாக்கி அதனை எமது அனைத்து உணவுகளுக்குள்ளும் அவசியமான உள்ளீடாக மாற்றியிருக்கின்றோம். அரிசியுணவு பழக்கத்திலிருந்து எம்மை கோதுமையுணவுகளுக்குள் திணித்திருக்கின்றோம் என்பதே பொருத்தமானதாகும். நம்மாழ்வார் கூறியது போல சுவரொட்டி ஒட்டுவதற்கு பயன்படும் கோதுமை மாப்பசையை நாம் பிட்டு, இடியப்பம் தோசை, ரொட்டி, ரோல்ஸ்,மிதிவெடி, சமோசா, போண்டா, சூசியம் உணவாக்கினால் இது நாம் வாழும் காலத்தின் நெருக்கடியினால் கட்டாயமான செயன்முறையாக உருவெடுத்தாலும் எமது உணவை சமனான உணவாக ஊட்டச்சத்து நிறைந்ததாக அதிலும் நஞ்சற்றதாக உண்ணும் வழக்கத்திற்குள் இருந்து எம்மை தனிமைப்படுத்தாது பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

உணவு சரியானதாக இல்லாமையால் தொற்றும் மற்றும் தொற்றா நோய்களிலிருந்து எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளும் அவசர நிலைக்குள் வந்திருக்கின்றோம் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். உலகளாவிய தொற்று நோய்களில் குறிப்பாக வைரஸ் நோய்களாக கொவிட் மற்றும் நிபா வைரசு போன்றனவற்றின் வெளிப்பாடு அண்டைநாடுகளில் அதிகரித்திருக்கின்ற போதிலும் நுளம்பினால் காவப்படும் டெங்கு நோய் எமது நாட்டில் தொடர்ச்சியாக உயிரிழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றதனை நாம் கவனத்திற் கொள்ளாதிருக்க முடியாது. அவ்வப்போது எலிக்காய்ச்சல், பறவைக் காய்ச்சல் என்பனவும் மக்களிடையே நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றமையையும் அவதானிக்கலாம்.

உடல் நலிவடைந்து அதற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை நாம் தேவையானளவு உட்கொள்ளாதிருந்தால் நாம் சுகதேகி என்பதனை வீராப்புடன் எந்தவகையிலும் சொல்லிக்கொள்ள முடியாது. தொற்றாத நோய்களாலும் வயது வேறுபாடின்றி சிறுவயதிலேயே நாம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதனைத் தற்போதய தரவுகள் சுட்டிக்காட்டியும் சற்றேனும் அதனை நாம் கவனத்திற்கொள்வதில்லை. எமது சமூகம் தேகாரோக்கியமானதாக இருப்பதற்கு நாம் ஊட்டச்சத்து நிறைந்த சமனான உணவை உட்கொள்வது அவசியமானதாகும். இலைக்கறிவகைகள், பழங்கள் என்பனவற்றை எமதுணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு..




பாரம்பரியமான உணவு நடைமுறைகளில் எமக்கான உணவை இருக்கின்ற இடவசதியைப் பொறுத்து நாமே உற்பத்தி செய்து அதனை நஞ்சற்றதாக உண்ணும் வழக்கத்தில் இன்னும் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. மனையில் சிறியளவில் நுண்தோட்டங்களை உருவாக்கி அதிலிருந்து எமக்கு அன்றாடம் தேவையான உணவுப்பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

இதற்காக மனைத் தோட்டத்தை இருக்கின்ற இடங்களில் எமக்கு வருவாய் உணவு மற்றும் தேனீக்களைக் கவரும் தேன் கொண்ட பூக்களையுடைய தாவரங்களை நடுகை செய்து அவற்றிலிருந்து பயனைஅவ்வப்போது பெற்றுக்கொள்ளலாம். மனைத் தோட்டங்களில் எமக்கு விருப்பப்பட்ட தாவரங்களை நடுகைசெய்யலாம். சற்றே இட வசதியிருக்கும் இடங்களாயின் பல்லாண்டுத் தாவரங்களை விரும்பி நடுகைசெய்யலாம். தினமும் எமக்கு உணவுதரும் பயிர்களை நடுகைசெய்ய வழி வகையுண்டு.

பல்லாண்டு மரங்களாக மா, பலா, நெல்லி(சிறுநெல்லி மற்றும் பெருநெல்லி), ஜம்பு, கொய்யா, மாதுளை, தேசி, விளும்பி, தென்னை, செடிவகைகளாக அலங்கார பூக்கும் தாவரங்கள், இவைதவிர மரக்கறிப்பயிர்கள், இன்னும் நுண்பசுமைத் தாவரங்கள் (Microgreens) அதனுடன் இலைக்கறிவகைகளுள் சிறுகீரை, பொன்னாங்காணி, வல்லாரை, அகத்தி, முருங்கை, புதினா, முசுட்டை, பசளி, கறிவேப்பிலை, இலைக்கோவா, இவ்வாறு தினமொரு இலைக்கறிவகை செலவில்லாமல் கறியாக்கி உணவில் சேர்த்துக் கொள்ளலாம். பழவகைகளுள் மா, பலா, வாழை, கிழங்கு வகைகள், பப்பாளி, கொய்யா, மாதுளை, ஜம்பு என பலவற்றை உணவாக்கலாம், இவற்றுடன் கொடிகள் ஏறிகள் படர்வன என பல்வகைத் தாவரங்களை உள்ளடக்கிய மனையாக மாற்றிக்கொள்ளலாம். பசுமை நிறைந்த இவ்வாறான மனைகளில் மனதிற்கு ரம்மியமான காட்சியும் குளிர்மையும் சுவாசிக்கும் நல்ல காற்றும் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன.

காலம் மாறத்தொடங்கிவிட்டது, காலநிலையும் தடக்கிவிழத் தொடங்கி விட்டது. இம்முறையும் நெற்செய்கையாளர்களை நீரில் அருவிவெட்டு செய்ய இணைந்த அறுவடை இயந்திரத்தை (Combined harvester) பயன்படுத்த தொடங்கிவிட்டார்கள். மாறிவரும் காலநிலையை கிரகித்து அனுமானித்து எமது விவசாயத்தைப் பாதுகாக்கும் பொறிமுறை வடமாகாணத்திற்கு அவசியம் தேவை. இதனைப் புரிந்து கொள்பவர்கள் இதற்கான முக்கியத்துவத்தை அளித்து அனைத்து மக்களும் இதிலிருந்து பயன்பெற அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

நகர்ப்புறங்களில் நிலைக்குத்தான விவசாயத்தை (vertical farming) ஊக்குவிக்கலாம். ஒவ்வொரு வீட்டிலும் நான்கு பக்கங்களிலும் அழகான சுவர் எழுப்பப்பட்டிருக்கும். அந்த சுவரை முழுமையாக நிலைக்குத்தான விவசாய பொறிமுறைக்கு மாற்றிக் கொள்ளும் வசதியுண்டு. சீமெந்து சுவரில் தாவரச் சாடிகள் அல்லது தாவரத்திற்கான வேர்த்தொகுதியை ஊட்டச் சத்துக்குள் அடக்கும் பொறி முறைக்கும் உள்கொண்டு வரலாம். நிலைக்குத்தான விவசாயத்தில் சிறியவகைத் தாவரங்களை விரும்பி பயிரிடலாம்.

அதே வேளை இனிவரும் காலங்களில் இளையவர்களின் கைகளில் வடமாகாண அபிவிருத்தியை மேற்கொள்ள தன்னம்பிக்கையுள்ள இளையவர் அணி ஆளணியாக திரட்டப்பட்டு திட்டமிடப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் கனகச்சிதமானதாக நடத்துதல் வேண்டும்.

பசுமையை கட்டியெழுப்பும் திட்டமாக மனைத்தோட்டங்களும் மாணவர்களின் வெளிப்புற செயற்பாடுகளும் அமையுமாயின் அவர்களுக்கு இலகுவாகத் தொழில் வாய்ப்பை தேடுவதற்கு வழியுண்டு. நமது தேசத்தை நாம் தான் கட்டிமுடிக்க வேண்டும். நமது உற்பத்தி வருவாய் பிறருக்கு உதவிசெய்தல் என பலவற்றை அடுக்கிக் கொண்டு போகலாம். அனைத்தும் சொல்லில் அல்லாது செயலில் இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 981





ஐயா! எனக்கு ஏற்கெனவே தாங்கள் செய்த தீங்கெல்லாம் போதாதா? இந்தப் பழி வேறு எனக்கு ஏற்பட வேண்டுமா?"

"ஆனால் அது உண்மைதானே? உன் காரணமாகத்தான் தஞ்சைக்கு நான் வரவில்லை."

"அப்படியானால், நான் தஞ்சையை விட்டுப் போய் விடுகிறேன். தாங்கள் தஞ்சைக்கு வந்து, தங்கள் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக்கொண்டு..."

"நந்தினி! அது ஒரு நாளும் நடவாத காரியம். எனக்குச் சிம்மாசனத்தில் இப்போது ஆசை இல்லை. மதுராந்தகத்தேவன் சிம்மாசனத்தில் அமர்ந்து சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தைச் சூட்டிக் கொண்டு இராஜ்யம் ஆளட்டும்"

"ஐயா! மதுராந்தகரைத் தங்களுக்கு நன்றாகத் தெரியும். அவரால் இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை ஒரு நாளேனும் ஆளமுடியுமா?"

"அவனால் ஆள முடியாவிட்டால், அவனுக்கு உதவி செய்யப் பழுவேட்டரையர்கள் இருக்கிறார்கள் நீயும் இருக்கிறாய்"

"ஐயா! தங்கள் விருப்பம் இப்போது நன்றாய் எனக்குத் தெரிகிறது. நான் தஞ்சையிலிருந்து, பழுவூர் அரண்மனையிலிருந்து, போய்விடுகிறேன். தாங்கள் தஞ்சைக்கு வந்து..."

"இல்லை, இல்லை! நீ தவறாக எண்ணுகிறாய்! எனக்கு அந்த எண்ணமே கிடையாது. உனக்கு நான் முன்னம் செய்த குற்றமெல்லாம் போதும். பழுவூர் அரண்மனையிலிருந்து உன்னைத் துரத்திய பாதகத்தையும் நான் சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டாம்"

"ஐயா! நாம் இருவரும் தஞ்சையில் இருக்க முடியாதா? அந்தப் பெரிய நகரில் நாம் இரண்டு பேரும் இருக்க இடம் இல்லையா? ஒருவரையொருவர் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லையே?"

"பார்க்க வேண்டிய அவசியமில்லாமலிருக்கலாம் ஆனால் மனத்தில் நினைக்காமல் இருக்க முடியுமா? சற்று முன் நீதான் சொன்னாய்! சென்று போனதையெல்லாம் மறக்க முடியாது என்று, உன் நெஞ்சத்திலுள்ள காயத்தைப் பற்றியும் சொன்னாய். என் நெஞ்சத்திலும் காயம் பட்டிருக்கிறது என்னாலும் மறக்க முடியவில்லை."

"மறக்க முடியாமல் இருக்கலாம் ஆனால் மன்னிக்க முடியாதா? நான் செய்த குற்றங்களை இத்தனை காலம் கழித்த பிறகும் மன்னிக்க முடியாதா?"

நந்தினி! நான் மன்னிக்கும்படியாக நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றம் செய்தவன் நான். உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவன் நான்.

காஞ்சியிலிருந்து புறப்பட்ட போதுகூட உன்னிடம் மன்னிப்புக் கேட்டுப் பெறலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன். ஆனால் வழியில் நான் அறிந்த ஒரு செய்தி உன்னிடம் மன்னிப்புக் கேட்கவே என்னைத் தகுதியற்றவன் ஆகிவிட்டது."


"கோமகனே! தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பது எந்த வகையிலும் தகுதியற்றதுதான். தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர், நான் பெற்ற தாய் தந்தையரால் கைவிடப்பட்ட அநாதைப் பெண்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உண்மையைத் தேடி



நெடுங்காலத்திற்கு முன் ஒரு நாட்டை ஓர் அரசன் நன்னெறி தவறாமல் ஆண்டு வந்தான்.

அவன் புகழ் உலகெங்கும் பரவி இருந்தது. அவன் நாள்தோறும் அதிகாலையில் தன்னந்தனியாகக் கோட்டைக்கு வெளியே சென்று கடலில் நீராடி விட்டுத் திரும்புவான்.

ஒருநாள், நீராடச் சென்ற அவன் அழகான பெண்ணொருத்தி கோட்டையை விட்டு வெளியே சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அவளிடம் சென்று, "அம்மா தாங்கள் யார்? இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான்தான் திருமகள். எந்த இடத்திலும் நான் அதிக காலம் தங்கக் கூடாது. இந்த நாட்டில் நான் நெடுங்காலமாகத் தங்கி விட்டேன்.

ஆகவே மாற்றம் வேண்டி வேறு இடம் செல்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

"உங்களுக்கு எங்கு விருப்பமோ அங்குச் செல்லுங்கள். நான் தடுக்க மாட்டேன்" என்றான் அரசன்.

அந்தப் பெண்ணும் வெளியே சென்று மறைந்து விட்டாள்.

சற்று நேரத்தில் இன்னொரு பெண் வந்தாள். நான்தான் கொடை. திருமகள் இல்லாத இடத்தில் என்னால் இருக்க முடியாது.

ஆகவே நானும் இந் நாட்டை விட்டுச் செல்கிறேன்" என்று அரசனிடம் சொன்னாள்,

அரசன் அவளையும் தடுக்க வில்லை.

சிறிது நேரத்தில் இன்னொரு பெண் அங்கு வந்தாள். "திருமகளும் கொடையும் இல்லாத இடத்தில் நன்னடத்தையாகிய என்னால் எப்படி இருக்க முடியும்? நானும் போகிறேன்" என்றாள். அரசன் மறுப்பேதும் சொல்லாமல் அமைதியாக நின்றான்.

நான்காவதாக வேறொரு பெண் அங்கே வந்தாள். "நான்தான் உண்மை. திருமகளும் கொடையும் நன்னடத்தையும் இல்லாத இடத்தில் என்னால் எப்படி இருக்க முடியும்? நான் வருகிறேன்" என்றாள்.

அவள் கால்களில் விழுந்த அரசன், "அம்மா! யார் இல்லாமலும் என்னால் இந்நாட்டில் இருக்க முடியும். உண்மையாகிய தாங்கள் இந்நாட்டில் தங்கியே ஆக வேண்டும்" என்று பணிவாக வேண்டினான்.

அவனின் வேண்டுகோளுக்கு இணங்கிய உண்மையும் அந் நாட்டிலேயே தங்க ஒப்புக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் நன்னடத்தை திரும்பவும் அந் நாட்டிற்குள் வந்தாள். "உண்மை இருக்கும் இடத்தில் நான் இருப்பேன்" என்றாள்.

அடுத்துக் கொடையும் திரும்பிவந்து "உண்மையும் நன்னடத்தையும் தங்கிய இடத்தில் நான் இருந்தாக வேண்டும்" என்றாள்.

"இம் மூவரும் இருக்குமிடத்தில் நான் இருப்பேன். நான் இந்த நாட்டை விட்டு நீங்க மாட்டேன்" என்றாள் திருமகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்

மஞ்ஞை (மயில்) நடமாடும் மாதோட்ட நன்னகரில் அமையப்பெற்ற திருக்கேதீஸ்வரம் பாடல் பெற்ற திருத்தலம்.

இலங்கைத் திருநாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதன் சான்றுகளில் ஒன்றாக திருக்கேதீஸ்வரம் விளங்குகிறது என்ற உண்மையை நம் தமிழினம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

உண்மை, இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் இலங்கையை சிவபூமி என விழித்தார்.

ஆக, இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதற்கு நம் நாடு சிவபூமியாக இருப்பது ஆதாரமாகும். இங்குதான் இலங்கை சிவபூமி என்பதை இந்த நாட்டில் அமையப்பெற்ற காலத்தால் முந்திய ஈச்சரங்கள் சான்றாகின்றன.

அந்தவகையில் இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் வழிபாடாற்றிய திருக்கோணேஸ்வரம், பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம் என்பன தட்சணகைலாயம் எனப் போற்றப்படும் இலங்கையில் தமிழர்களின் உரிமத்தை உறுதி செய்வன.

எனினும் தமிழர்களின் வரலாற்று பொக்கிஷத்தை மதத்தின் பெயரால் தமிழர் சிலர் சிதைக்க நினைப்பது தமிழ்த் தாய்க்கு செய்கின்ற துரோகத்தனமாகும்.

அதேவேளை மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் எழுச்சி என்பது போதுமானதாக இல்லை. இங்கு ஆலயத்தின் எழுச்சி என்பது மதம் கடந்து அனைவரும் வழிபடுகின்ற சிவத்தலமாக திருக்கேதீஸ்வர ஆலயம் விளங்க வேண்டும்.

இதை உதாரணப்படுத்துவதாக இருந்தால், ஒருமுறை யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்த பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் தனது உரையில் "என் தாயார் மதுரை மீனாட்சியை வணங்கி..." என விழித்தார்.

இங்குதான் தமிழகம் சமய வரையறைகளைக் கடந்து தமிழைப் போற்றுகிறது.

ஆம், பேராசிரியர் சாலமன் பாப்பையா மிகச்சிறந்த தமிழறிஞர். பிறப்பால் கத்தோலிக்கராக இருந்தாலும் மதுரை மீனாட்சித் தாயை நினைந்து உருகினார் என்பதற்குள் தமிழ் மீதான பக்தி மிகுந்து நிற்கிறது.

இது போலவே மன்னார் திருக்கேதீஸ்வரத்தின் பெருமையை மன்னாரில் இருக்கக்கூடிய கத்தோலிக்கத் தமிழ் மக்களும் உச்சரிக்க வேண்டும். அந்த உச்சரிப்புக்குள் சமயம் கடந்து, எம் ஈழத்தமிழ்த் தாய் மீதான பக்தியும் அன்பும் உயர்வுபெறும்.

ஆம், இந்திய மத்திய அரசு திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புனரமைப்புச் செய்ததன் பிற்பாடு, இந்த நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திருக்கேதீஸ்வரத்தில் தைப்பொங்கல் விழாவைத் தொடக்கி வைக்க, கடந்த சிவராத்திரி விரத நாளில் பிரதமர் ஹரிணி அமர சூரிய அவர்கள் சேலை அணிந்து சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் திருக்கேதீஸ்வர நாதனை வழிபாடாற்றினார்.

இந்த முக்கியத்துவத்தை திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம் புகைப்படம் எடுப்பதுடன் மட்டுப்படுத்தாமல், அதனோடு ஆலயத்தின் இடர்களைக் களைகின்ற காரியத்திலும் ஈடுபட வேண்டும். அதுவே ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி ஆகியோரின் திருக்கேதீஸ்வர வழிபாடு பெறுமதி உடையதாக அமையும்.

ஆம், இந்த நாட்டின் தமிழர்களின் தொன்மைக்குச் சான்றாக இருக்கும் திருக்கேதீஸ்வர நாதனுக்கு நுழைவாயில் கோபுரம் அமையப் பெறவில்லை என்றால் – அதற்கு நம் தமிழர்களே தடை என்றால், ஆலய நிர்வாகத்தின் இயங்கு நிலை போதுமானதா? என்ற கேள்வி எழவே செய்யும்.

# வடக்கு நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தனித்துவமான புதிய இடமாற்றக்கொள்கை

## ●●●●● ஆளுநர் நா.வேதநாயகன் ●●●●●

*(யாழ்ப்பாணம்)*

வடக்கு மாகாண நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தனித்துவமான புதிய இடமாற்றக் கொள்கையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வட பிராந்தியக் கிளையினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை (17.02.2026) மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டது.

தற்போது முகாமைத்துவ அலுவலர்கள் சேவைக்கான பொதுவான இடமாற்றக் கொள்கையே பின்பற்றப்பட்டு வருகின்றது. இந் நிலையில், அதிசிறப்புத் தர முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கென தனியானதொரு இடமாற்றக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். அதற்கமைய, புதிய கொள்கையை உருவாக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான கடமைப் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுத்தல், சில திணைக்களங்களில் அவர்களுக்குரிய தனிப்பட்ட அலுவலக இடவசதிகளை உறுதி செய்தல் மற்றும் விசேட பயிற்சிகளை வழங்குதல் போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

இவற்றையும் ஏற்றுக்கொண்ட ஆளுநர், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாகக் கடமையாற்றும் அதிசிறப்புத் தர உத்தியோகத்தர்கள், விடுமுறைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. மேலும் செயலாளர்கள் உத்தியோகபூர்வ நாட்குறிப்பைப் பேணுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பிலும் சாதகமாகப் பரிசீலிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வடபிராந்தியக் கிளைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.(ம-7)

# நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற நிலையில், இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற பாராளுமன்ற ஒய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற நிலையில், இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஜனாதிபதியை எவரும் சிங்கள ஜனாதிபதி என்று குறிப்பிடவில்லை.

வடக்குக் கிழக்கு உட்பட மலையக மக்கள் "எமது ஜனாதிபதி" என்றே ஜனாதிபதியை அன்புடன் அழைக்கிறார்கள். இந்த முன்னேற்றம் மற்றும் மாற்றம் எதிர்க்கட்சிகளின் கண்களுக்கு தெரிவதில்லை. இனவாத முரண்பாடுகளால் சிதைவடைந்த மனங்களை ஆற்றுப்படுத்துவதற்கு சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளோம். விமர்சனங்களை முன் வைப்பவர்கள் தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருக்கட்டும்.

மக்கள் மத்தியில் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படாது. ஆனால் மக்களின் நிதியை மோசடி செய்த ஊழல்வாதிகள் முன்னிலையில் நாங்கள் தன்னிச்சையாகச் செயற்படுவோம் என்றார். *(ம-7)*

### நீர்கொழும்பில்

# மின்சாரம் தாக்கியதில் வங்கி ஊழியர் மரணம்

கம்பஹா - நீர்கொழும்பு பகுதியில் மின்சாரம் தாக்கியதில் தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு (16) இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் கொழும்பு, கொலன்னாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் நீர்கொழும்பிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றி வந்த நிலையில், தனது வேலை நிமித்தம் நீர்கொழும்புப் பகுதியில் வாடகைக்கு வீட்டில் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் தங்கியிருந்த வீட்டில் இருந்த பழுதடைந்த மின் விசிறியைத் திருத்த முற்பட்ட போதே மின்சாரம் தாக்கியதில் இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

### மட்டக்களப்பில் கடும் மழை

# பல தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் தென்கிழக்கே நிலவிய சுழற்சியானது தாழ்வுப் பகுதியாகி அதே இடத்தில் நீடிப்பதன் காரணமாக தொடர்ச்சியாக மழையினை எதிர்பார்க்க முடியும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் பெய்து வரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக தாழ் நிலங்கள் வெள்ள நீரினால் மூழ்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெரும்போக அறுவடைகள் நடைபெற்றுவருவதன் காரணமாக விவசாயிகள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது.

அறுவடை செயற்பாடுகள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதுடன் அறுவடை செய்தவர்கள் நெல்லைப் பாதுகாப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 25

இதனால், சோவியத் யூனியன் சரிந்துவிட்டது என்பதற்காக சிஐஏவை மூட்டை கட்டிவிடமுடியாது என்று கருதியது அமெரிக்க அரசாங்கம். அவர்களுக்கு வேறு பல முக்கியமான கடமைகள் பாக்கியிருந்தன.

"எனினும், மக்கள் மத்தியில் அவர்கள் இழந்த மரியாதை திரும்பக் கிடைப்பதாக இல்லை. பனிப்போர், சோவியத் அபாயம் இல்லாததால், பகிரங்கமாகவும் தைரியமாகவும் சிஐஏவை விமர்சிக்கிறவர்கள் அதிகமாகிவிட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில், சிஐஏவுக்கு, தேச பக்தி, அமெரிக்காவின் பாதுகாப்பு ஆகிய நோக்கங்கள் போதவில்லை. இப்போது நம்முடைய பாதுகாப்புக்கு என்ன குறைச்சல் வந்துவிட்டது? என்று பலர் பேசத் தொடங்கினார்கள்.

பத்திரிகைகள், பிற ஊடகங்களில், சிஐஏவின் பழைய தவறுகள், குறைகளெல்லாம் பட்டியலிடப்பட்டன. இவர்களுக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் செலவழித்தது போதும் என்று எதிர்ப்புக் குரல்கள் வலுத்தன.

ஒருகட்டத்துக்குமேல், அமெரிக்க அரசால் இந்த எதிர்ப்பைச் சமாளிக்க முடியவில்லை. சிஐஏவின் அதிகாரங்கள் (மீண்டும்) குறைக்கப்பட்டன. அவர்களுடைய செலவுக்காக ஒதுக்கப்படும் பட்ஜெட்டும் கணிசமாகக் குறைந்திருந்தது.

இப்படியொரு சிரமமான சூழ்நிலையை, சிஐஏ அதற்குமுன் எப்போதும் சந்தித்தது இல்லை. அடுத்த ஏழு வருடங்களுக்குள், சிஐஏவுக்கு ஐந்து இயக்குநர்கள் மாறிவிட்டார்கள். யாராலும் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை.

இதே காலகட்டத்தில், சிஐஏவை ஆதரித்துப் பேசியவர்களும் இருந்தார்கள். ஆனால், "உளவுத்துறை நாட்டுக்கு அவசியம்" என்று சொல்கிறவர்களைவிட, "அது வீண் செலவு" என்று வாதாடியவர்கள், "சிஐஏவின் வாலைக் கொஞ்சம் நறுக்கிவைப்பது நல்லது" என்று விமர்சித்தவர்கள் தான் அதிகம்.

வேறுவழியில்லாமல், சிஐஏ தன்னுடைய எல்லைகளைக் குறுக்கிக்கொண்டு செயற்படப் பழகிக் கொண்டது. முன்புபோல் அதிதீவிரமாக இல்லாமல், மிக அவசியமான வேலைகளைமட்டும் செய்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் அப்போதும், அவர்கள் முழுமையாக நம்பிக்கை இழந்திருக்கவில்லை. உளவுத்துறையின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்கிற நாள் வரும் என்று நம்பி, காத்திருந்தார்கள்.

சுமார் பத்து வருடங்களுக்குப்பிறகு நிகழ்ந்த 9/11 தாக்குதலின் போது தான், அமெரிக்காவில் மீண்டும் சிஐஏவுக்கு மவுசு கூடியது. உளவுத்துறை அவசியம் என்பதைப் புரிந்து கொண்டு, அதற்கு உரிய முக்கியத்துவம் தரத் தொடங்கினார்கள். ஆனால் அதுவரையில், அமெரிக்கச் சமூகத்தில் ஒரு வேண்டாத விருந்தாளிபோல்தான் சிஐஏ செயற்படவேண்டியிருந்தது.



இந்தக் காலகட்டத்தில், மக்களிடையே தங்கள் இமேஜை உயர்த்திக் கொள்வதற்காக, சிஐஏ என்னென்னவோ செய்து பார்த்தது - பல பழைய இரகசிய ஆவணங்களை பகிரங்கமாக வெளியிட்டார்கள். முதன் முறையாக. பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சிச் செய்தியாளர்களுடன் நல்லுறவு வளர்த்துக் கொள்ள முற்பட்டார்கள்.

ஆனால், சோவியத் சறுக்கலின் போது அவர்கள் வாங்கியிருந்த அடி மிகப் பெரியது. இதுபோன்ற சின்னச் சின்ன மருந்துகளால், அதைக் குணப்படுத்தவும் முடியவில்லை. சிஐஏவைப் பழையபடி பலப்படுத்தவும் முடியவில்லை.

நாம் உயிர் பிழைக்கவேண்டுமானால், அதற்கு ஒரு சக்தி வாய்ந்த "சூப்பர் மருந்து" தேவை என்று யோசித்தது சிஐஏ. இதற்காக அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தபோது, அவர்களுக்குத் தோதாகக் கிடைத்தது ஒரு சர்வரோக நிவாரணி. தீவிரவாத எதிர்ப்பு!

### 11. தீவிர(ஷ)வாதம்

"தீவிரவாதம்" என்கிற வார்த்தைக்கு, அகராதி சொல்லும் அர்த்தமும், அமெரிக்கா சொல்கிற அர்த்தமும் எப்போதும் ஒத்துப்போனதில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அத்துமீறுகிறவர்கள், ஆக்கிரமிக்கிறவர்கள், அடுத்தவர்களைக் காரணமில்லாமல் தாக்குகிறவர்கள் எல்லோரும் தீவிரவாதிகள்தான். தங்களைத்தவிர வேறு யாரும் இதையெல்லாம் செய்யக்கூடாது என்று மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டிருந்ததால் அப்படி நினைத்தார்களோ என்னவோ.

சோவியத் யூனியன் சரிவதற்குப் பல ஆண்டுகள் முன்பாகவே, உலகம் முழுவதும் தீவிரவாதம் பரவி வருவதைக் கவனித்துவிட்டது சிஐஏ. சீக்கிரத்தில், இது நமக்குப் பெரிய தலைவலியாகும் என்பதையும் புரிந்துகொண்டுவிட்டார்கள்.

தொழில்நுட்பம் வளர்ந்துகொண்டிருக்கிறது. நமக்குக் கிடைக்கிற அதே கருவிகள், அதே உபகரணங்கள், அதே ஆயுதங்கள் தீவிரவாதிகளுக்கும் கிடைக்கத் தொடங்கினால், கடைசியில் உலகம் முழுவதும் கொரில்லா யுத்தங்கள்தான் மிஞ்சும் என்று எண்ணிய சிஐஏ. சீக்கிரத்தில் சுதாரித்துக்கொண்டுவிட்டார்கள்.

காரணம், அமெரிக்கா ஒரு பணக்கார நாடு என்பதும், அதன் வல்லரசு அடையாளமும் எல்லோருக்கும் தெரிந்த விடயங்கள். பழுத்த

என்.சொக்கன்

மரத்துக்குதான் கல்லடி விழும். தவிர, உலகத்தில் அரை இஞ்ச் மீதமில்லாமல் உளவு பார்த்துக் கொண்டிருக்கிறது சிஐஏ. தங்களை மீறி யார் என்ன செய்தாலும், "யாருப்பா அங்கே?" என்று அதட்டி மிரட்டாவிட்டால் அமெரிக்காவுக்குப் பொழுது போகாது.

இதனால் எரிச்சலடைந்த பல குழுக்கள், அமெரிக்காமீது தங்களுடைய ஆயுதங்களைத் திருப்பக் கூடும் என்று கருதியது சிஐஏ. இதைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

1986ஆம் ஆண்டு, சிஐஏவில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு (Counter-Terrorism Center) உருவாக்கப்பட்டது. இவர்களுடைய வேலை, உலகம்முழுக்க எங்கே என்னென்ன தீவிரவாதக் குழுக்கள் உருவாகியிருக்கின்றன. அவற்றுக்கு யாரெல்லாம் ஆதரவு தருகிறார்கள். அவர்களுடைய நோக்கம் என்ன. இலக்கு என்ன என்பதை ஆராய்வது.

ஏற்கெனவே யாரும் பயங்கர ஆயுதங்களைத் தயாரிக்கக்கூடாது, அதற்காகதான் ஊர்முழுக்க வேவு பார்க்கிறோம் என்று தனக்கான ஒரு நியாயத்தை உருவாக்கிக்கொண்டிருந்த சிஐஏ, இந்தப் புதிய பிரிவை அதன் நீட்சியாகவே பார்த்தது. பயங்கர ஆயுதங்கள்போலவே, பயங்கரவாதிகளையும் கண்டுபிடித்துக் களையெடுக்கப் போகிறோம் என்று கிளம்பினார்கள்.

இதற்கான ஆள் பலமும், தொழில்நுட்பமும் ஏற்கெனவே சிஐஏவிடம் இருந்தது. அதற்கு இப்போது ஒரு புதிய அர்த்தம், நோக்கம் கற்பித்துக் கொண்டார்கள். அவ்வளவுதான்.

எப்போதும், அதிநவீன தொழில்நுட்பத்துக்கு ஒரு படி மேலே இருக்க வேண்டும் என்பதுதான் சிஐஏவின் கொள்கை. அவர்களுடைய பிழைப்பு என்னதான் மனித உளவாளிகள், ஒற்றர்களை நம்பியிருந்தாலும், தொழில்நுட்பத்தோடு கை கோர்த்துக் கொண்டால், மேலும் பல மடங்கு சிறப்பாகச் செயற்படமுடியும் என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

டேவிட் லம்மி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் தற்போதைய நிலையில் விஜயம் மேற்கொண்டமைக்காகப் பிரிட்டன் துணைப் பிரதமருக்கு நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போது பிரிட்டன் வழங்கிய ஒத்துழைப்புகளைப் பாராட்டினார்.

குறிப்பாக, இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்காக விதிக்கப்பட்டிருந்த வரிச்சலுகைகளை நீக்கி, பிரிட்டன் வழங்கிய விசேட ஆதரவுக்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எட்டியுள்ள பொருளாதார முன்னேற்றம் குறித்து பிரிட்டன் துணைப் பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார். குறிப்பாக வரி அற வீட்டுச் செயற்பாடுகள் உள்ளிட்ட புதிய பொருளாதாரத் திட்டங்களை அவர் இதன்போது வெகுவாகப் பாராட்டினார்.

பசுமை வலுசக்தி துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு ஆரம்பித்துள்ள வேலைத் திட்டங்களுக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்க எதிர்பார்ப்பதாக டேவிட் லம்மி உறுதியளித்தார்.

சமீபத்தில் இலங்கையைத் தாக்கிய "டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் வேதனையான அனுபவங்கள் குறித்து பிரிட்டன் துணைப் பிரதமர் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார். இந்தச் சவால்களை முறியடித்து இலங்கை மிக விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் அவர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

## டில்லி சென்ற...

சென்றடைந்தார்.

புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதிக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி நாளை 19ஆம் திகதி விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் 20 நாடுகளின் அரச தலைவர்களும் 45ற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ள நிலையில் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தவுள்ளார். (ம-7)

## இந்தியா - பாகிஸ்...

கொழும்பில் நடத்திருக்குமா? என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஒரு சில அசம்பாவிதங்கள் பதிவாகின்றன. அதற்காக முழு நாட்டிலும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் பிரச்சினை இருப்பதாகக் கூறமுடியாது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்குமாயின் இரண்டு நாட்டின் தேசிய வீரர்கள் எவ்வாறு நாட்டிற்கு வருகை தருவார்கள்.

பாதுகாப்புத் தொடர்பில் உறுதிப்படுத்திய பின்னரே போட்டியை நடத்துவதற்கான அனுமதியை சர்வதேச கிரிக்கெட் பேரவை வழங்கும். நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க இடமளிக்க முடியாது.

உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்புவதை நிறுத்த வேண்டும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## யாழ்.பல்கலைக்...

நடைபெறவுள்ளது.

குறித்த தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அண்மித்துக் காணப்படும் இராமநாதன் வீதி ஒரு வழியாக மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் விமதிவதனி வெளியிட்ட அறிவிப்பில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 40ஆவது பட்டமளிப்பு விழா 2026 பெப்ரவரி 19, 20, 21 மற்றும் 22ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதால் இராமநாதன் வீதியானது கலட்டிச் சந்தி முதல் பரமேஸ்வராச் சந்தி நோக்கி ஒரு வழிப் பாதையாக, மேற்படி நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை பாவனையில் இருக்கும் என்பதை அறியத் தருகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பயங்கரவாதச்...

சர்வதேச உரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப அமையவில்லை. மக்களை அடக்குவதற்கும் அடிப்படை உரிமைகளை பறிப்பதற்கும் வசதியாக இந்தச் சட்டமூலம் வரையப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட, அரசாங்கத்தைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் தொடர்பில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அம்பிகா சற்குணநாதன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சட்ட மூலத்தில் உள்ள பயங்கர வாதம் பற்றிய வரைவிலக்கணம் மிகவும் பரந்ததாக உள்ளதால் நபர் ஒருவர் எந்தக் குற்றம் செய்தாலும் அரசு அவரைக் கைது செய்யலாம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வரவுள்ள புதிய வரைபுச் சட்டத்தின்கீழ் ஒருவர், ஒரு வருடம் தடுப்பாணையில் தடுத்து வைக்கப்படலாம்.

மற்றும்தடுப்புக் காவலில் வைக்கப்படலாம். ஆகையால் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே ஒருவரைப் பிணையில் அனுமதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்திற்கு பொலிஸாரின் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது கைது செய்வதற்காக தேடுதல் நடவடிக்கைக்கான அதிகாரம் இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனநாயக நாட்டில் இராணுவம், பொலிஸாரின் கடமையைச் செய்யக்கூடாது எனக் கூறப்படுகின்றது.

அதுபோல் ஜனாதிபதியின் அதிகாரமும் அதிகரிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதன் மூலம் சாதாரண சில காரணங்களுக்காக சிவில் அமைப்புக்கள்கூட தடை செய்யப்படலாம்.

இது தவிர, நீதித்துறையில் இருக்கும் பல அதிகாரங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இந்தச் சட்டமூலம் அரசைப் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்பதை விட மக்களின் ஜனநாயக உரிமையினை இல்லா தொழிக்கின்றது என்றே கூறமுடியும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கருத்துரைத்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 6108
K 7 2 1 3 0 9
அத சம்பத
K 1 3 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 0683
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 224
கடகம் 29 31 65 4894

தன நிதானய
திகதி - 2026.02.17
சீட்டிழுப்பு இலக்கம் - 2138
Z 28 33 51 63 Z
Double Chance

மெகா பவர்
திகதி 17/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2456
V 21 31 50 73 77

ஜய JAYA
திகதி 2026.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 0376
X 0 3 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4350
சீட்டிழுப்பு திகதி 17.02.2026
B 29 36 52 79
B
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 1417
துலாம் 06 18 27 52 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
17.02.2026 வெற்றி வாரம் 0816
ஆங்கில எழுத்து F
9 5 2 3 1 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,550,726.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3082
சீட்டிழுப்பு திகதி 2026.02.17 தினம் செவ்வாய்க்கிழமை
04 14 51 74 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,268,917.60
DLB

சனிதா
17.02.2026 வெற்றி வாரம் 5243
29 32 42 73 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,111,999.20
DLB

சசிரி
வெற்றி வாரம் 912
சீட்டிழுப்பு திகதி 17.02.2026
செவ்வாய்க்கிழமை
08 10 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,840,840.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4794
சீட்டிழுப்பு திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
04 07 09 52 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,361,281.20
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 22 06 16 41 52
சீட்டிழுப்பு வாரம் 2258
17.02.2026 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.629,578,044.40
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2908
சீட்டிழுப்பு திகதி 2026.02.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,828,710.40
03 17 54 69 F
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

லிருந்த ஆயுதங்களே பாதாள உலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று (17) பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்ட கேள்விக்குப் பதிலளித்த போது அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இது ஒரு தனிப்பட்ட பிரச்சினை என்றும் தேசிய பாதுகாப்பில் எந்தத் தாக்கமுமில்லை என்றும், இந்தச் சம்பவத்தால் தேசிய பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக சித்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தக் கொலையை ஒருபோதும் சட்டத்தின் ஆட்சிக்கு அச்சுறுத்தலாகக் கருதக் கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. சமூகத்தில் ஏராளமான ஆயுதங்கள் புழக்கத்தில் உள்ளன.

கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் நான் பணியாற்றி வருகிறேன்.

மேலும், சில இராணுவ முகாம்களால் பாதாள உலகத்திற்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் சூழலில் இதுபோன்ற கொலைகள் நடைபெறுகின்றன.

இவ்வாறான கொலை கலாசாரத்தை நாங்கள் கண்டிக்கிறோம். மேலும் எங்கள் வருத்தத்தை மீண்டும்மீண்டும் தெரிவித் துக்கொள்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)


## மணப்பெண் தேவை

01.பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)
02.கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03.அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)
04.நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28920)
05.நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)
09.கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)
10.பருத்தித்துறை, இந்து, 1993, ரேவதி, Bachelor of Civil Engineering, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(32449)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(6864)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 076 528 4510

## English Classes

உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது

Zoom மூலமும் Gr 1 to O/L

♦Grammar ♦Spoken & School Syllabus

(6868)

T.P: 077 33 14 608

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5017)

076 825 7716 (ஆகாஸ்)

இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ▶ 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, புதுக்குடியிருப்பு, கோப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வவுனியா, முல்லைத்தீவு, சுன்னாகம், சங்கானை, வல்வெட்டித்துறை, கொழும்பு, மன்னார், கொடிகாமம், மானிப்பாய், புத்தூர், மட்டக்களப்பு, கிளிநொச்சி, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, நெல்லியடி (C-5018)

V2 TRAVELS 076 822 6244, 076 455 0672

## வேலையாட்கள் தேவை

நவாலியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- இயந்திரம் இயக்குபவர் (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள முடியும்)
- காசாளர் (பெண்)

(6863)

தொடர்பு: 076 301 0115

## தேவை

- மிக்சர் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் (ஆண்/பெண்)
- மில் வேலை தெரிந்தவர்கள் (ஆண்/பெண்)
- உதவியாளர்கள் (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு: (2064)

076 440 0816

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 07 - 1961

மறைவு 04 - 01 - 2026

### சிறிஸ்கந்த குமாரன் இலட்சுமி

அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமை அம்மம்மாவே!
நாட்கள் ஓடி மறைந்தாலும்
மாறுமோ எம் மனங்களில்
உம் நினைவு!
நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
வாழும் அம்மம்மா!

(2061)

3ம் வட்டாரம்,
பெருங்காடு.

தகவல்: பேரப்பிள்ளைகள்
தவீனா, தவிஷா

## வேலைவாய்ப்பு

K. K. S வீதி மனோகராச் சந்தியில் அமைந்துள்ள எமது இயற்கை பூக்கள் மற்றும் பூமாலைக் கடைக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.

- சம்பளம்:- 30000/= தொடக்கம் 45000/= வரை
- வெளிமாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு தங்குமிடம், உணவு என்பன இலவசம்.

(2063)

077 989 8190, 075 475 7056

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- மாம்பழச்சந்தியிலிருந்து 350m தூரம்
- ஒரு பரப்பின் விலை :- 48 இலட்சம்

(2062)

076 860 2770, 076 987 8617

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு அருகாமை.
- 24 அடிப்பாதை.
- ஊரெழு பிள்ளையார் கோயிலடியில் இருந்து 2 Km தூரம்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(6867)

தொடர்பு: 074 018 8731
075 412 9203


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org